ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

Department of Examinations, Sri Lanka

5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2020

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2020

# வினாத்தாள் I

ஒரு மணித்தியாலம்

**சுட்டெண்** :.......................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |


| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்**<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T |
| **இரண்டாவது பரீட்சகர்**<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்**<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் மொத்தப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T/EMF |
| **பிரதான பரீட்சகர்**<br>மேற்பார்வை செய்தேன்.<br>மொத்தப் புள்ளிகள் சரியாகும். | V/I/T/CH |

PAPERMASTER.LK

[பக். 2 ஐப் பார்க்க

● கீழே தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து **1, 2** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

**1.** கட்டத்தின் உள்ளே உள்ள சித்திரத்துக்குப் பெருமளவில் ஒத்ததாக வரையப்பட்டுள்ள சித்திரம் எது?






(1)


(2)


(3)

**2.** உரு A ஐ ஒத்த ஓர் உருவைப் பெறுவதற்காக உரு B இல் செய்யவேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை எத்தனை?



A உருவம்


B உருவம்

(1) 2 (2) 3 (3) 5


● **3, 4** ஆகிய வினாக்களில் கட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உரு எது?



**3.**




(1)  (2)  (3) 

**4.**



(1)  (2)  (3) 

**5.** இந்த உருவைச் சரியாகப் பூர்த்தி செய்ய எந்த உருவத்துண்டை இணைக்கவேண்டும்?




(1)  (2)  (3) 


PAPERMASTER.LK

சுட்டெண் :...............................


**6.** கட்டத்தினுள் உள்ள உருக்களைப் பாருங்கள்.




இந்த மூன்று உருத் துண்டுகளையும் ஒன்றுபடச் சேர்த்து அமைக்கக்கூடிய தனி உரு எது?



(1)




(2)




(3)

**7.** உருக்களில் காட்டப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்களையும் ஒழுங்கு முறைப்படி காட்டும் விடை எது?





(1) A, B, C (2) A, C, B (3) C, A, B


**8.** 

வெறுமையான கட்டத்துக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.


(1)  (2)  (3) 

**9.** கட்டத்தினுள் உள்ள உருக்களின் வரிசையில் அடுத்ததாக இடவேண்டிய உரு எது?




(1)



(2)




(3)

PAPERMASTER.LK

[பக். 4 ஐப் பார்க்க


**10.** இந்த நான்கு அட்டைகளிலும் உள்ள உரோம இலக்கங்களை ஏறுவரிசைப்படி வைத்தால் உருக்கள் அமையும் ஒழுங்கு எது?








**11.** தரப்பட்டுள்ள கோலத்தில் உள்ள வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான விடை எது?






**12.** 966, 999, 39765 ஆகிய எண்களை இடமிருந்து வலமாகவும் 389, 796 ஆகிய எண்களை மேலிருந்து கீழாகவும் அமையுமாறு கட்ட வலையமைப்பை நிரப்பினால், நான்காவது நிரலில் மேலிருந்து கீழாக அமையும் எண் யாது?



(1) 59 (2) 66 (3) 69

**13.** கீழே தரப்பட்டுள்ள இரண்டு உருக்களும் ஊடுகாட்டும் தாள்கள் இரண்டில் வரையப்பட்டுள்ளன.




உரு 1 உரு 2


இரண்டு உருக்களினதும் C அடையாளத்தை ஒன்றன் மீது ஒன்று அமையுமாறு, ஒரு தாளின் மீது மற்றைய தாளை வைப்பதால் கிடைக்கும் உரு யாது?




**14.** 31 நாள்கள் உள்ள ஒரு மாதத்தில் முதலாந் திகதி ஒரு திங்கட்கிழமை ஆகும். அம்மாதத்தில் 31 ஆம் திகதி

(1) செவ்வாய்க்கிழமை ஆகும். (2) புதன்கிழமை ஆகும். (3) வியாழக்கிழமை ஆகும்.


**15.** சேகர் அதிகாலை 6.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரையிலும், பாலன் அதிலிருந்து மாலை 5.00 மணி வரையிலும் தயா அதிலிருந்து இரவு 8.00 மணி வரையிலும் ஒரு வேலையில் ஈடுபட்டனர். அவர்கள் மூவரும் அந்த வேலையில் ஈடுபட்ட நேரத்தின் அளவினைக் காட்டும் விடை எது?




PAPERMASTER.LK

[பக். 5 ஐப் பார்க்க

**16.** பின்வரும் உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



(1) 5 (2) 6 (3) 7

**17.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 7 | 4 | 5 | 2 | 6 |

இங்கு தரப்பட்டுள்ள ஏழு இலக்கங்களையும் ஏறுவரிசைக்கு ஒழுங்குபடுத்துவதற்காக எத்தனை இலக்கங்களின் இடங்களை மாற்றுதல் வேண்டும்?

(1) 3 (2) 4 (3) 5


**18.**

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 6 |
| 3 | 6 | 12 | 3 |
| 4 | 8 | | 5 |
| 3 | 1 | 5 | 5 |

இந்த உருவில் உள்ள வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் எது?

(1) 14 (2) 15 (3) 16

**19.** பின்வரும் உருவில் வெறுமையாக உள்ள பகுதியை நிரப்புவதற்குப் பொருத்தமான பகுதிகளைக் கொண்ட விடை எது?



(1) 

(2) 

(3) 

**20.** 01, 02 என்றவாறாக 50 வரையில் எண்களை எழுதும்போது 0 இலக்கம் எத்தனை தடவைகள் இடம்பெறும்?

(1) 7 (2) 13 (3) 14

**21.** மூன்று வகுப்புகளில் உள்ள மாணவர் எண்ணிக்கை 36, 37, 38 ஆகும். அவற்றுள் ஒரு வகுப்பில் ஆண்களின் எண்ணிக்கையை விட மூன்று பெண்பிள்ளைகள் கூடுதலாக உள்ளனர். அந்த வகுப்பில் உள்ள மொத்த மாணவர் எண்ணிக்கை யாது?

(1) 36 (2) 37 (3) 38

**22.** பின்வரும் பாடலினால் குறிப்பிடப்படுவது எது?

எல்லையை அறிந்து அங்குமிங்கும் செல்வான்
துன்பத்திலும் இன்பத்திலும் எப்போதும் நனைவான்
விபத்துகள் ஏற்பட ஒருபோதும் இடமளியான்
கதவுகள் இரண்டையும் விரைவில் மூடிவிடுவான்.


(1) கண் (2) வாய் (3) மூக்கு

PAPERMASTER.LK

[பக். 6 ஐப் பார்க்க

● சைக்கிள் பயணி ஒருவர் ஆரம்ப இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து அதே இடத்தை வந்தடையும் விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய **35, 36** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

**35.** சைக்கிள் பயணி மீண்டும் ஆரம்ப இடத்தை அடைவதற்குள் வலதுபுறமாகவும் இடதுபுறமாகவும் திரும்பிய தடவைகள் எத்தனை?




(1) வலதுபுறமாக 1, இடதுபுறமாக 5

(2) வலதுபுறமாக 4, இடதுபுறமாக 1

(3) வலதுபுறமாக 5, இடதுபுறமாக 1


**36.** சைக்கிள் பயணி மீண்டும் ஆரம்ப இடத்தை அடையும்போது பயணஞ் செய்துள்ள மொத்தத் தூரம் எத்தனை கிலோமீற்றர்?

(1) 24 (2) 29 (3) 32

**37.** அமலன், கமலன், சமன் ஆகிய மூன்று நண்பர்களதும் தங்கைகள் மூவரும் கீதா, ராணி, சீதா ஆவர். கீதாவுடன் அமலனின் தங்கை அமர்ந்திருக்கிறார். கமலனின் தங்கை கீதா அல்ல எனின், சமனின் தங்கை யார்?

(1) கீதா (2) ராணி (3) சீதா

**38.** A, B ஆகிய பாத்திரங்களில் உள்ள அரிசியில் சரிபாதி வீதம் வெளியே எடுத்து அவை அப்பாத்திரங்கள் இரண்டிலும் மாற்றி இடப்பட்டன. இப்போது பாத்திரம் A இல் உள்ள அரிசியின் அளவானது, பாத்திரம் B இல் உள்ள அரிசியின் அளவிலும்




(1) மிகக் குறைவானது.

(2) சமமானது.

(3) மிகக் கூடுதலானது.

**39.** ராஜாவிடம் இருந்த பணத்தொகையை விட 25 ரூபா கூடுதலாக ஆஷாவிடம் இருந்தது. ஆஷா 15 ரூபாவை ராஜாவுக்குக் கொடுத்தால், ராஜாவிடம் உள்ள பணத்தொகை ஆஷாவிடம் உள்ள பணத்தொகையிலும்

(1) ஐந்து ரூபாவினால் கூடியது.

(2) பத்து ரூபாவினால் கூடியது.


(3) பத்து ரூபாவினால் குறைவானது.

**40.** வட்டவடிவ ஓட்டப் பாதை ஒன்று உருவில் தரப்பட்டுள்ளது. இரண்டு பிள்ளைகள் அதன் A என்னும் இடத்திலிருந்து ஒரேயடியாகப் புறப்பட்டு, ஒரே திசையில் செல்கின்றனர். ஒருவரது கதி மற்றவரது கதியின் இரண்டு மடங்கு எனின், அவர்கள் இருவரும் மீண்டும் சந்திக்கும் இடம் எது?

(1) A

(2) B

(3) C




PAPERMASTER.LK

***

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

Department of Examinations, Sri Lanka

**5**

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2020

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2020

# வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் :...............................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
- **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழே கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதி மொத்தப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T/EMF |
| **பிரதான பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும். | V/II/T/CH |

PAPERMASTER.LK

[பக். 2 ஐப் பார்க்க

**1.** பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

வயல் வரம்பில் அமர்ந்திருந்த ராஜாவைப் பார்த்த சந்திரனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. ராஜாவுடன் விளையாடுவதற்காகச் சந்திரன் ஆர்வத்தோடு வயல் பக்கமாக ஓடோடிச் சென்றான். அத்துடன் வர்ணமயமான பறவையைப் போன்று வானத்தில் பறந்து செல்லும் பட்டத்தைக் கண்ட சந்திரன் பெருமகிழ்ச்சி அடைந்தான். தனது பட்டத்தின் நூல் அறுந்து தொலைவில் செல்வதாக ராஜா கவலையுடன் தனக்கு அருகில் வந்த சந்திரனுக்குக் கூறினான். வானத்தில் அசைந்து தொலைவில் செல்லும் பட்டத்தினைப் பார்த்துக் கொண்டிருந்த ராஜாவின் கண்களில் கண்ணீரைக் கண்ட சந்திரன் "நாங்கள் இன்னுமொரு பட்டத்தைச் செய்வோம்" என்று ஆலோசனை கூறினான்.

- **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

(i) சந்திரன் எதற்காக வயலை நோக்கி ஓடிச் சென்றான்? ....................................................

(ii) விரைவாகச் சென்றதைக் குறிப்பிடுவதற்கு பந்தியில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் எது?

..........................................................................................................

(iii) சந்திரனுக்குப் பட்டம் எதைப் போன்று காட்சி அளித்தது? ..........................................

(iv) 'கவலை' என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. ..............................................

(v) ராஜாவின் பட்டம் வானத்தில் அசைந்து தொலைவில் செல்லக் காரணம் யாது?

..........................................................................................................

(vi) "நாங்கள் இன்னுமொரு பட்டத்தைச் செய்வோம்" என்று சந்திரன் ஆலோசனை கூறியது ஏன்?

..........................................................................................................

**2.** உயர்திணை இறந்தகால ஒருமை வினைச்சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.

(1) ஓடினான் (2) சென்றது (3) பிரகாசித்தன

**3.** தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

ஆற்றல்/ மனிதனுக்கே/ அமைந்த / சிறப்பாக / கொடையாகும் / மொழி / ஒரு

.......................................................................................................... .

**4.** பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு **சரியாயின்** சரி '✓' எனவும் **பிழையாயின்** பிழை '✗' எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

(i) தங்கை காலையில் பாடசாலைக்குச் சென்றாள். (.........)

(ii) இரவில் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் மின்னின. (.........)

(iii) அன்னங்கள் குளத்தில் நீந்துகின்றன. (.........)

(iv) அப்பா காலையில் விழித்தெழுவார்கள். (.........)

**5.** பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

| |
|---|
| கவனமாகச் செவிமடுத்துக் கூறும் வேலைகளைச் செய்யப் பழகுங்கள் என்று ஆசிரியை கூறினார் |

**6.** (i) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

அடம்பன் கொடியும் ................................ மிடுக்கு

(ii) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதனைத் தவறவிடக் கூடாது.

PAPERMASTER.LK

..........................................................................................................

[பக். 3 ஐப் பார்க்க

சுட்டெண் :..............................

**7.** பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள **சரியான எழுத்துக் கூட்டல்** உள்ள சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) எமது நாட்டில் கலை (நுற்பம் / நுட்பம்) நிறைந்த சிலைகள் உள்ளன.

(ii) டெங்கு நோய் பற்றி (நிகழ்த்திய / நிகள்த்திய) உரை மிகவும் சிறப்பாக இருந்தது.

**8.** பின்வரும் வாக்கியத்தை நிகழ்காலத்தில் எழுதுக.

அவர்கள் விளையாடினார்கள்.

..........................................................................................................................

**9.** பெண்பால் சொல்லை எழுதுக. நண்பன் : ..........................

**10.**

பாரதி பாடசாலை
2020.10.05

அன்புள்ள குமணன்,

நீங்கள் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருப்பதாக நாங்கள் அறிந்தோம். அதற்காக நாங்கள் கவலைப்படுகிறோம். நீங்கள் இப்பொழுது ஓரளவு நலமாக உள்ளதாக ஆசிரியை எங்களுக்குக் கூறினார். பாடசாலை வேலைகளைத் தவறவிட்டதாகக் கவலைப்பட வேண்டாம். நீங்கள் நலமடைந்து பாடசாலைக்கு வரும்போது நாங்கள் உங்களுக்கு உதவி செய்வோம்.

நீங்கள் விரைவில் நலமடையப் பிரார்த்திக்கின்றோம்.

இப்படிக்கு
தரம் ஐந்து நண்பர்கள்

(i) இக்கடிதம் யாருக்கு எழுதப்பட்டது? ..........................................................

(ii) இக்கடிதம் யாரால் எழுதப்பட்டது? ..........................................................

(iii) நண்பர்களின் பிரார்த்தனை யாது? ..........................................................


**11.** தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய **தமிழ்ச்** சொற்களை எழுதுக.

(i) Rainbow : .................................. (ii) Daughter : ......................................

**12.** தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை **ஆங்கில** எழுத்துக்களிலேயே எழுதுக.

(i) 

..................................

(ii) 

..................................

**13.** கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) a / This / playground / is :.......................................................................... .

(ii) am / my / helping / I / mother : ........................................................... .

**14.** "பங்குவ" என்ற சிங்களச் சொல்லுக்குரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.

..........................................................................................................................

PAPERMASTER.LK

**15.** பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் **தமிழில்** எழுதுக.

"கை கழுவுங்கள் ".........................................

**16.** எண் சட்டத்தில் வகை குறிக்கப்படும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.




: ..........................................

**17.** பின்வரும் எண்ணை எழுத்தில் எழுதுக.

7050 : ..............................................................................................

**18.** பின்வரும் எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.

8607 , 6078 , 8706

..........., ..........., ...........,

**19.**

| | |
|---|---|
| 1 | 9 |
| 5 | |
| 13 | 17 |

கட்டத்தினுள் உள்ள எல்லா எண்களையும் பயன்படுத்தி பொதுவித்தியாசம் 4 ஆகவுள்ள எண்கோலம் ஒன்றை ஆக்கி எழுதுக.

1 , ......, ......, ......, ......

**20.** ஒரு பாடசாலையில் 1046 பெண்பிள்ளைகளும் 938 ஆண்பிள்ளைகளும் உள்ளனர்.


(i) பாடசாலையில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..............................................................................................

(ii) இப்பாடசாலையில் உள்ள ஆண்பிள்ளைகளிலும் பார்க்க எத்தனை பெண்பிள்ளைகள் கூடுதலாக உள்ளனர்?

..............................................................................................

**21.** பின்வரும் உருவில் $\frac{3}{4}$ ஐ (பென்சிலால் அல்லது பேனையால்) நிறந் தீட்டுக



**22.** 24 மணித்தியாலக் கடிகாரம் 13 : 30 எனக் காட்டும் போது 12 மணித்தியாலக் கடிகாரம் காட்டும் நேரம் யாது? ..........................

**23.** 416 இனை 4 இனால் வகுக்கும்போது விடை யாது? ..........................................

**24.** பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபாய் | சதம் | ரூபாய் | சதம் |
| அரிசி | 3 kg | 95 | 00 | (i) .......... | .......... |
| பருப்பு | 500 g | (ii) .......... | .......... | 87 | 50 |
| மொத்தப் பணம் | | | | **372** | **50** |

PAPERMASTER.LK

**25.** ஒரு தாங்கியில் 10 லீற்றர் 500 மில்லிலீற்றர் நீரும் வேறொரு தாங்கியில் 8 லீற்றர் 600 மில்லிலீற்றர் நீரும் உள்ளன. இரண்டு தாங்கிகளிலும் உள்ள நீரின் அளவுகளிடையே உள்ள வித்தியாசம் யாது?

............ லீற்றர் ............ மில்லிலீற்றர்


**26.** பை ஒன்றில் 2 kg 350 g அரிசி இருந்தது. அதற்குள் மேலும் 1 kg 750 g அரிசி இடப்படுகின்றது. இப்போது பையிலுள்ள அரிசியின் மொத்த நிறை யாது?

............ kg ............... g

**27.** நகரம் A இலிருந்து நகரம் B வரையுள்ள தூரம் 5 km 750 m ஆகும். நகரம் B இலிருந்து நகரம் C வரையுள்ள தூரம் 7 km 500 m ஆகும். நகரம் A இலிருந்து நகரம் B இனூடாக நகரம் C வரை உள்ள மொத்தத் தூரம் யாது?


............ km ............... m

**28.** உருவில் காட்டப்பட்டுள்ள திண்மப் பொருளின் பெயரை எழுதுக.



.................................

**29.** ஒரு மணித்தியாலத்தில் வீதியொன்றில் சென்ற வாகனங்கள் பற்றிய தகவல்கள் கீழேயுள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளன.




வீதியில் சென்ற வாகனங்களின் மொத்த எண்ணிக்கை யாது? .....................

- இலக்கம் **30** தொடக்கம் **59** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

**30.** 'இலவசக் கல்வியின் தந்தை' என அழைக்கப்படுபவர்

(1) கலாநிதி. ஆனந்த குமாரசுவாமி

(2) கலாநிதி. ரீ. பீ. ஜாயா

(3) கலாநிதி. சி. டபிள்யு டபிள்யு கன்னங்கரா

**31.** பின்வருவனவற்றுள் **தொற்றாத** நோய்க்கு உதாரணமாக இருப்பது எது?

(1) வாந்திபேதி (2) நீரிழிவு (3) டெங்கு

**32.** கால்களை உடைய விலங்குகள் மாத்திரம் இடம் பெறும் விடை எது?

(1) நாய், மண்புழு, கொக்கு (2) பூனை, பாம்பு, கோழி (3) கிளி, தாரா, ஆமை

**33.** வெளவாலினால் மனிதருக்குக் கிடைக்கும் நன்மை

(1) இரவு நேரத்தில் நடமாடுதல்

(2) ஒலியை எழுப்புதல்

(3) விதைகளைப் பரவச் செய்தல்


PAPERMASTER.LK

[பக். 6 ஐப் பார்க்க

**34.** நாங்கள் உணவுக்காகப் பயன்படுத்தும் மலர் வகையைக் காட்டும் உரு எது?


(1)



(2)


(3)

**35.** அனைத்துமுண்ணி விலங்குகள் எனக் குறிப்பிடப்படுபவை
(1) தாவர வகையை மாத்திரம் உணவாகக் கொள்ளும் விலங்குகள்.
(2) மாமிச வகையை மாத்திரம் உணவாகக் கொள்ளும் விலங்குகள்.
(3) தாவர உணவு, மாமிச உணவு ஆகிய இரண்டையும் உணவாகக் கொள்ளும் விலங்குகள்.

**36.** நீராவியில் அவிப்பதனால் தயாரிக்கப்படும் உணவு வகை எது?
(1) அப்பம் (2) இடியப்பம் (3) ரொட்டி

**37.** இந்த உபகரணம் எதற்குப் பயன்படுத்தப்படுகிறது?



(1) காற்று வீசும் திசையை அறிவதற்கு
(2) காற்றின் வேகத்தை அளப்பதற்கு
(3) காற்றிலுள்ள நீராவியின் அளவைக் காண்பதற்கு

**38.** வீட்டுத் தோட்டத்தில் பயிர்களுக்கு இடையில் செவ்வந்திப் பயிரைப் பயிரிடுவதன் முக்கிய நோக்கம்
(1) வீட்டுத் தோட்டத்திற்கு அழகைச் சேர்ப்பதற்கு
(2) பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் பூச்சிகளை விரட்டுவதற்கு
(3) வீட்டுத் தோட்டத்தின் இடஅளவை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு

**39.** சூரிய ஒளி மூலம் கிடைக்கும் வெப்பத்தினால் நீர் ஆவியாகுதல் பயன்படும் சந்தர்ப்பம்
(1) பழங்களிலிருந்து ஜாமைத் தயாரித்தல்
(2) மீனிலிருந்து கருவாட்டைத் தயாரித்தல்
(3) பசுப் பாலிலிருந்து வெண்ணெயைத் தயாரித்தல்

**40.** உலோகக் கரண்டியில் சிறிதளவு நீரை ஊற்றி உருவில் காட்டப்பட்டுள்ளவாறு எரியும் மெழுகுவர்த்தியின் சுவாலை மீது பிடிக்கப்படுகின்றது. இப்போது நீருக்கு நிகழுவது யாது?



(1) நிறம் மாற்றமடைதல்
(2) வெடிப்பு ஏற்படுதல்
(3) சூடாகுதல்

**41.** நூல்நிலையம் ஒன்றினுள் **செய்யக் கூடாத** செயல் யாது?
(1) சத்தம் இடாமல் புத்தகங்களை வாசித்தல்
(2) வாசித்த புத்தகங்களை குறித்த இடங்களில் வைத்தல்
(3) வாசிக்கும் புத்தகங்களில் பல்வேறு அடையாளங்களை இடுதல்

**42.** வீதி சமிக்ஞை விளக்குகளின் தூணில் சிவப்பு நிற மின்குமிழ் எரியும்போது அதனால் கருதப்படுவது,
(1) 'வாகனத்தை நிறுத்துக' என்பது ஆகும்.
(2) 'வாகனம் பயணிக்குக' என்பது ஆகும்.
(3) 'வாகனம் பயணிப்பதற்கு ஆயத்தமாகுக' என்பது ஆகும்.

**43.** சூழல் மாசடைதல் குறைவடைவது
(1) ஞாயிற்றுக் கலங்கள் மூலம் மின்சக்தி பெறும் போது
(2) நிலக்கரி மூலம் அனல் மின்சக்தி நிலையம் இயங்கும் போது
(3) பெட்ரோல், டீசல் ஆகியவற்றைப் பயன்படுத்தி வாகனங்கள் செலுத்தப்படும் போது

PAPERMASTER.LK

[பக். 7 ஐப் பார்க்க

**44.** பனிக் கட்டிகள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம்
(1) பழவகைகளை நல்ல நிலையில் பாதுகாத்தல்
(2) உலர் தானியங்களை பழுதடையாமல் வைத்திருத்தல்
(3) மீனைப் பழுதடையாமல் வைத்திருத்தல்

**45.** மனிதன் தொடர்பாடலுக்காக ஆதிகாலத்தில் பயன்படுத்திய முறை, நவீன காலத்தில் பயன்படுத்தும் முறை என்பவற்றை ஒழுங்கு முறையில் குறிப்பிடும் விடை எது?
(1) தொலைபேசியைப் பயன்படுத்துதலும் மின்னஞ்சலும்
(2) தீக்குவியல் மூட்டலும் தொலைபேசியைப் பயன்படுத்துதலும்
(3) முரசறைதலும் தீக்குவியல் மூட்டலும்

**46.** சைக்கிளுடன் இணைக்கப்பட்டுள்ள பற்சில்லுகள், சங்கிலித்தொகுதி ஆகியன பெரிதும் உதவுவது
(1) சைக்கிளின் சமநிலையைப் பேணுவதற்கு
(2) சைக்கிளைத் தேவையான திசைக்குத் திருப்புவதற்கு
(3) சைக்கிளை இலகுவாக ஓட்டிச் செல்வதற்கு

**47.** வடக்கு, வடமேற்கு, சப்பரகமுவ என்பவை இலங்கையின்,
(1) மூன்று மாவட்டங்கள் (2) மூன்று மாகாணங்கள் (3) மூன்று நகரங்கள்

**48.** இரண்டு சட்டக் காந்தங்களின் முனைவுகள் ஒன்றினுக்கொன்று கிட்டக் கொண்டு செல்லப்பட்டன. அப்போது இரண்டு காந்தங்களும் ஒன்றினையொன்று ஈர்ப்பதனைக் காணக்கூடியதாக இருந்தது. அதற்காக இரண்டு காந்தங்களும் கிட்ட வைக்கப்பட வேண்டிய சரியான விதத்தினைக் காட்டும் உரு யாது?
(1) [S N][N S] (2) [S N][S N] (3) [N S][S N]

**49.** பாதணிகளைக் கழற்றிய பின்னர் வீட்டினுள் நுழைதல் நல்ல சுகாதாரப் பழக்கமாயிருப்பதற்குக் காரணம்
(1) பாதணிகளைக் கழற்றுவதால் பாதங்களுக்கு சௌகரியம் இருப்பதை உணர்கின்றமை
(2) பாதணிகளில் உள்ள கிருமிகள் வீட்டினுள்ளே நுழைவது தவிர்க்கப்படுகின்றமை
(3) அடுத்தநாள் பாதணிகளைக் கண்டுபிடிக்க இலகுவாக இருக்கின்றமை


**50.** பின்வரும் இடங்களில் உலக மரபுரிமை எனப் பெயரிடப்பட்டிருப்பது எது?
(1) சிங்கராசவனம் (2) யால சரணாலயம் (3) பேராதனை தாவரவியற் பூங்கா

**51.** காட்டில் உலாவும் போது திசைகாட்டியை எடுத்துச் செல்லுதல் முக்கியத்துவம் பெறுவது ஏன்?
(1) தொலைவில் உள்ள விலங்குகளை அவதானிப்பதற்கு
(2) செல்ல வேண்டிய திசையைக் கண்டறிவதற்கு
(3) பெறுமதிமிக்க கற்பாறைகளை இனம்காண்பதற்கு

**52.** பின்வரும் உணவு வகைகளில் உடலுக்கு சக்தியை வழங்குவதற்குத் தேவையான உணவு எது?
(1) சோறு (2) பயற்றங்காய் (3) வல்லாரை

**53.** தானியப் பயிர் வகைக்குரிய பருப்புக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய உணவு
(1) வற்றாளை (2) பயறு (3) பூசணிக்காய்

**54.** உலர் கலங்களுடன் இணைக்கும் கம்பிகளினால் மின்குமிழ்கள் இணைக்கப்பட்டுள்ள மூன்று சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. பின்வரும் எந்த சந்தர்ப்பத்தில் மின்குமிழ் **ஒளிர்வதில்லை?**



(1) (2) (3)

PAPERMASTER.LK

[பக். 8 ஐப் பார்க்க

**55.** தூர நோக்கற்ற மனிதனின் செயற்பாடுகளினால் அனர்த்தம் நிகழக்கூடிய சந்தர்ப்பம்

(1) மின்னல் தாக்கம் காரணமாகப் பயிர்ச் செய்கை அழிவடைதல்

(2) சூறாவளிக் காற்று வீசும் போது வீடுகள் உடைந்து விழுதல்

(3) மலைப் பகுதிகளில் உள்ள மண்ணை வெட்டுவதனால் மண்சரிவு ஏற்படுதல்

**56.** 'பல்லாங்குழி' என்பது,

(1) மருந்துகள் தயாரிக்கும் முறைகளில் ஒன்று

(2) கிராமிய விளையாட்டுகளில் ஒன்று

(3) தொடர்பாடல் முறைகளில் ஒன்று

**57.** இலங்கைக்கே உரித்தான பறவையையும் முலையூட்டி விலங்கினையும் ஒழுங்கு முறையில் குறிப்பிடும் விடையைத் தெரிவு செய்க.

(1) காட்டுக்கோழியும் வெட்டியானும்

(2) காட்டுக்கோழியும் கருங்குரங்கும்

(3) சபன் கோழியும் கொம்பு ஓணானும்

**58.** "ஏலேலோ ஐலசா..... ஏலேலோ ஐலசா .....
கட்டு மரத்தோணியிலே...... ஏலேலோ ஐலசா"
என்று தொடங்கும் இப்பாடல்


(1) உழவர் பாடல்  (2) மீனவர் பாடல்  (3) அரிவிவெட்டுப் பாடல்

**59.** நீர் நிரப்பப்பட்ட ஒரு போத்தல் உருவில் காட்டப்பட்டுள்ளது. இங்கு நீர் மூலம் ஏற்படுத்தப்படும் அமுக்கம் அதிகமுள்ள இடம் எது?

(1) A

(2) B

(3) C




**60.** "பாடசாலை மூடப்பட்டிருந்த காலத்தை நான் கழித்த விதம்" என்பதைத் தலைப்பாகக் கொண்டு **மூன்று** வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. ..............................................................................................................

..............................................................................................................

2. ..............................................................................................................

..............................................................................................................

3. ..............................................................................................................

..............................................................................................................

PAPERMASTER.LK

***